## லைசென்ஸ் இன்றி அந்நியர்கள் வியாபாரம்

# புக்கிட் பிந்தாங்கில் மீண்டும் சோதனை




கோலாலம்பூர், ஜன. 20-

ஜாலான் அலோர், புக்கிட் பிந்தாங், கோலாலம்பூரில் அந்நியர்கள் வியாபாரம் செய்யும் இடத்தில் கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று மீண்டும் அதிரடிச் சோதனை நடத்தியது.

லைசென்ஸ் இன்றி அந்நியர்கள் வியாபாரம் செய்வது தொடர்பில் அங்கு சோதனை மேற்கொள்ளப்பட்டது. ஏற்கெனவே இதே இடத்தில் கோலாலம்பூர் மாநகர் மன்ற அதிகாரிகள் இதேபோன்ற அதிரடிச் சோதனையை நடத்தி இருக்கின்றனர்.

அப்படியிருந்தும் அந்நியர்கள் சிலர் அனுமதி இன்றி அங்கு தொடர்ந்து வியாபாரம் செய்துவருவது தெரியவருகிறது. மாலை 6.30 மணிக்கு அங்கு அதிரடிச் சோதனை நடத்தப்பட்டது. அந்நியர்கள் உணவு வியாபாரம் செய்வதும் குளிர்பானம் விற்பதும் தெரியவந்திருக்கிறது.

ஆடைகளையும் மற்ற பொருட்களையும் இவர்கள் அனுமதி இன்றி விற்பனை செய்ததும் கண்டறியப்பட்டதால் அங்கு சோதனை மேற்கொள்ளப்பட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் தன் முகநூல் பதிவில் வெளியிட்ட அறிக்கையில் கூறியது.

அந்நியர்கள் சிலர் லைசென்ஸ் இன்றி வியாபாரம் செய்வதும் மற்றவர்களின் லைசென்சுகளைப் பயன்படுத்தியதும் பொது இடத்தில் இடையூறு ஏற்படுத்தியதும் கண்டறியப்பட்டது.

மேலும் சில அந்நியர்கள் அங்காடி வியாபாரத்திலும் ஈடுபட்டிருந்தனர். 2 உணவுக்கடைகளில் இருந்து பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மொத்தம் 9 அந்நியப் பிரஜைகள் லைசென்ஸ் இன்றி வியாபாரம் செய்ததால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.